பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**05 10 2026 MONDAY 6.30 PM**

<u>மாநிலச்செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1)** சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள், வரி விதிப்பை எளிமைப்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2)** ஓய்வூதியதாரர்களின் நலன்களை பாதுகாப்பதில் உறுதியுடன் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**3)** மகளிர் திட்டங்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

**4)** தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5)** உகாண்டா சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியா 2 தங்கப்பதக்கங்களை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள், வரி விதிப்பை எளிமைப்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் எழுதியுள்ள கட்டுரையை பகிர்ந்துள்ளார்.

இந்த வரி சீர்திருத்த நடவடிக்கைகள் பொருளாதாரத்திற்கு உத்வேகம் அளிப்பதோடு, வருவாயை பெருக்கவும் உதவியுள்ளதாக பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>>

ஓய்வூதியதாரர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் தேசிய அளவிலான ஓய்வூதியதாரர்களின் குறைதீர் கூட்டத்தில் பங்கேற்று அவர் பேசினார்.

இந்தக் கூட்டத்தில் பெறப்பட்ட **897** மனுக்களில் **756** மனுக்களுக்கு தீர்வுகாணப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

மகளிர் நலனுக்கான திட்டங்களுக்கு தவெக அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு ரமேஷ் கூறியுள்ளார்.

இன்று திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

***(Sound Byte — ரமேஷ் - 53 Sec. )***

<<<<<>>>>>>

தமிழகத்தில் பாமாயில் கொள்முதலில் தவெக அரசு **600** கோடிக்கும் மேல் ஊழல் புரிந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு உதயநிதி ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திமுக ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது வாங்கப்பட்ட விலையைவிட கூடுதலாக லிட்டருக்கு **11** ரூபாய் கொடுத்து பாமாயில் கொள்முதல் செய்யப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் துயரங்களை களைய தவெக அரசு முன்வர வேண்டும் என்றும் திரு உதயநிதி ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>>

அரசு மருத்துவமனைகளில் டயாலிசிஸ் சேவை வழங்கும் பிரிவுகளை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சிறுநீரக செயலிழப்பால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதாக வெளியாகிவரும் செய்திகள் அதிர்ச்சி அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமாக டயாலிசிஸ் சேவை கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் அவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

<<<<<>>>>>>

ஆட்டோ ஒட்டுநர்களின் பொருளாதார நெருக்கடிக்கு நிரந்தர தீர்வுகாண தேவையான நடவடிக்கைகளை தவெக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் திரு வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆட்டோ கட்டணம் 2013-ஆம் ஆண்டு முதல் திருத்தப்படாமல் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன்காரணமாக, அவர்களின் வருமானம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதனை கருத்தில்கொண்டு ஆட்டோ கட்டணத்தை உயர்த்த உரிய நடவடிக்கைகளை தவெக அரசு எடுக்க வேண்டும் என்றும் திரு வீரபாண்டியன் அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

<<<<<>>>>>>

தமிழக அரசின் புதிய ரக வேட்டி - சேலை உற்பத்திக்கான கூலியை உயர்த்த வேண்டும் என்ற நெசவாளர்களின் கோரிக்கையை தவெக அரசு நிறைவேற்ற வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் திரு சண்முகம் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இக்கோரிக்கையை வலியுறுத்தி, நெசவாளர்கள் தொடர் போராட்டம் நடத்திவந்தபோதிலும், அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாதது கண்டனத்திற்குரியது என்று தெரிவித்துள்ளார்.

பொங்கல் பண்டிகை நெருங்கி வருவதால், இதுகுறித்து தவெக அரசு நெசவாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று திரு சண்முகம் அந்த அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>>

விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த தவெக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று அமமுக பொதுச்செயலாளர் திரு டி டி வி தினகரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரிசியின் விலை கடந்த ஐந்து மாதங்களில் மூன்றாவது முறையாக அதிகரித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்க்கரை, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்கனவே பல மடங்கு அதிகரித்துள்ள நிலையில், அரிசி விலையும் தொடர்ந்து உயர்ந்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

நியாயமான விலையில் அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதை தவெக அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு டி டி வி தினகரன் கோரியுள்ளார்.

<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை 40 Sec. )***

இதற்கிடையே, உதகையில் பெய்த கனமழை காரணமாக, சாலையில் வெள்ள நீர் தேங்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — சரவணன் — 38 Sec. )***

<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

விழுப்புரம் மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் உற்பத்தி செய்த பொருட்களின் கண்காட்சியை ஆட்சியர் திரு ஷேக் அப்துல் ரஹ்மான் இன்று தொடங்கிவைத்தார்.

----------------

நாமக்கல் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு

ஆட்சியர் திரு மதுபாலன் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

----------------

விருதுநகர் மாவட்டத்தில் இன்று நடைபெற்ற வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்வதற்கான பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சியை ஆட்சியர் திருமதி ஷரண்யா அரி இன்று பார்வையிட்டார்.

-------------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஊட்டச்சத்து மாத விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திருமதி சினேகா தொடங்கிவைத்தார்.

----------------

தென்காசி மாவட்டத்தின் மேக்கரை வனப்பகுதியில் நீர்வழிப்பாதைகளை ஆக்கிரமித்து அமைக்கப்பட்ட தனியார் நீர்வீழ்ச்சிகள் அகற்றப்பட்டு வருகின்றன.

--------------

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூரில் உள்ள தொழில்நுட்ப பல்கலைக்கழக வளாகத்தில் டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

----------------

சென்னை பூங்கா நகர் தலைமை அஞ்சல் அலுவலகம் மற்றும் அண்ணாநகர் அஞ்சல் அலுவலகங்களில், அஞ்சல் பதிவு சேவை இரவு **10** மணிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உகாண்டா சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியா **2** தங்கப்பதக்கங்களை வென்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Aesha Gandhi**-யும், மகளிர் இரட்டையர் பிரிவில் **Akshita — Ishita** இணையும் இப்பதக்கங்களை கைப்பற்றியது.

------------------

உலக ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Om Verma** பட்டம் வென்றார்.

கானாவில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், **6-3, 6-3** என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **David Beckles** -ஐ வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Mannan Ashok Agarwal — Dev Vipul Patel** இணையும் பட்டம் வென்றது.

-------------

எகிப்தில் இன்று தொடங்கிய உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியா **2-0** என்ற ஆட்டக்கணக்கில் அல்ஜீரியாவை வென்றது.

**<<<<<END>>>>>>**